செ.வெ.எண். 36 நாள்: 12.09.2017

**திருநெல்வேலி மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் பாலிடெக்னிக் விரிவுரையாளர் போட்டி எழுத்துத்தேர்வு16.09.2017 அன்று நடைபெறுதல் தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் பாலிடெக்னிக் விரிவுரையாளர் போட்டி எழுத்துத்தேர்வு 16.09.2017 அன்று நடைபெறுதல் தொடர்பான முன்னேற்பாடு ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (12.09.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில், 21 தேர்வு மையங்களில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கான விரிவுரையாளர் போட்டி எழுத்துத்தேர்வு 16.09.2017 அன்று நடைபெற உள்ளது. இப்போட்டித் தேர்வினை 7296 தேர்வர்கள் தேர்வு எழுதுகின்றனர். இத்தேர்வு, சிறப்பான முறையில் நடைபெற பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், காவல்துறையின் மூலம் தகுந்த பாதுகாப்பு வசதிகளையும் மேற்கொள்ள வேண்டும். தேர்வு காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெற உள்ளது. தேர்வர்களுக்கு தேவையான கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள் செய்து தர வேண்டும். மேலும், போக்குவரத்துத்துறையின் மூலம் தேர்வு மையங்களுக்கு வந்து செல்ல பேருந்து வசதிகளை செய்து தர வேண்டும். மின்சாரத்துறையின் மூலம், தேர்வு மையங்கள் உள்ள பகுதிகளில் தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தேர்வு மையங்களுக்கு தேர்வர்கள் கைக்குட்டை, கால்குலேட்டர், கைபேசி, பேஜர், சயின்டிபிக் ரிச்ட் வாட்ச், கேமிரா கொண்ட பந்துமனை பேனா உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களை கொண்டு வரக்கூடாது. ஆண் மற்றும் பெண் காவலர்கள் தேர்வர்களை சோதனை செய்திட வேண்டும். வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் மற்றும் விடைத்தாள்களை காவல்துறையின் பாதுகாப்புடன் சரியான நேரத்தில் கொண்டு செல்ல வேண்டும். தேர்வுப்பணியில், முதன்மை கண்காணிப்பாளர்கள், கூடுதல் முதன்மை கண்காணிப்பாளர்கள், துறை அலுவலர்கள், கூடுதல் துறை அலுவலர்கள், அறை கண்காணிப்பாளர்கள், நிற்கும் படையினர் (Standing Force), வழிதட அலுவலர், வழிதட உதவியாளர் நியமிக்கப்பட்டு கண்காணிப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. தேர்வுப்பணிகளை மாவட்ட வருவாய் அலுவலர், கோட்டாட்சியர், முதன்மை கல்வி அலுவலர் மற்றும் உயர் அலுவலர்கள் தேர்வு மையங்களை கண்காணிக்கவும், தேர்வுகள் அமைதியான முறையில் சிறப்பாக நடைபெற அனைத்துத் துறை அலுவலர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சு.இளம்பகவத், இ.ஆ.ப., முதன்மை கல்வி அலுவலர் திருமதி.தனமணி, மாவட்ட கல்வி அலுவலர்கள் (சேரன்மகாதேவி) திரு.ஜெயராஜ், (திருநெல்வேலி) திரு.ஜெயபாண்டி, (தென்காசி) திரு.சுடலை மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி